IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.168/2021
DEPOSITION OF WITNESS (PW1)

வா.சா. 1 சாட்சி பார்த்திபன் த.பெ. வெங்கடசாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 02.01.2025 in accordance with the provisions of Act XX141.**

3முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. தாவா வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாதையை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பாதையை பொறுத்து விளம்புகை பரிகாரம் நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பாதையின் விஸ்தீரணம் என்ன என்றால் தென்வடலாக நீளம் 107 அடியும், கிழமேலாக அகலம் 12 அடியும் ஆகும்.

2. எனது பிராதில் பாதையின் கிழமேல் நீளம் 107 என்பது தவறு என்றால் தெரியாது. பாதையின் தென்வடல் அகலம் 12 அடி என்று பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி பாதை பொதுப்பாதை என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா வழக்கின் 3ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

3. 3ம்பிரதிவாதி வரைபட அனுமதி வழங்ககூடாது என்று பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். அவ்வாறு 3ம்பிரதிவாதிக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 5ம்பிரதிவாதி மின் இணைப்பு வழங்கக்கூடாது என்று பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால்

கேட்டுள்ளேன். அவ்வாறு 5ம்பிரதிவாதிக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

4. 3ம்பிரதிவாதி 1, 2 பிரதிவாதிகளின் ஆவணங்களை பார்த்துதான் முறையான வரைபட அனுமதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் பரிகாரம் கேட்காததால் 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக வியாஜியமூலம் கிடையாது என்றால் சரியல்ல.

5. வழக்குரையில் உள்ள சொத்து விபரம் தவறானது என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.